| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.ஜோசப்<br>த/பெ.திரு.சவரிமுத்து | அ.வ.எண். 314/2005 | 22.07.2026 |

<u>இ.ம.எண்.10/2026 மனு 22.07.2026 இன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1, 2, 5, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் நான் வழக்கு சொத்து என்னுடையது என்று விளம்புகை செய்ய கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்குரை தபசிலில் A, B அட்டவணை சொத்துக்களை வழக்கு சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு A அட்டவணை சொத்து என்பது எனது வீடு என்றால் சரிதான். A அட்டவணை சொத்தில் தற்போதைய புல எண் என்ன என்றால் புல எண்.152/8. அதன் பழைய புல எண் என்ன என்றால் தெரியாது.

2) வழக்கு B அட்டவணை சொத்தில் தற்போதைய புல எண்.152/20 என்றால் சரியல்ல, புல எண்.152/11. வழக்கு B அட்டவணை சொத்தையும் சேர்த்தே நான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு B அட்டவணை சொத்தின் புல எண்.152/20 என்று எனது வழக்குரையில் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, புல எண்.152/11. நான் இவ்வழக்கில் புல எண்.152/8, 152/11 ஐ பொறுத்து மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3) புல எண்.152/8 ஐ நான் சாந்தம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான், ஏப்ரல் மாதம் 1990ல் கிரையம் பெற்றேன். எனது கிரையதாரர் சாந்தம்மாளுக்கு மேற்படி சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் அவரது கணவர் அந்தோணிசாமி இறந்த பிறகு பாக

பிரிவினையில் 1974 ல் சாந்தம்மாளுக்கு மேற்படி சொத்து கிடைத்தது. மேற்படி சாந்தம்மாளுக்கு பாகம் பிரிந்த பாக பிரிவினை ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 தான் மேற்படி பாகபிரிவினை ஒப்பந்த சீட்டு என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.3 முறையாக பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பதிவு செய்யப்படாததற்கான அபராதத்துடன் கூடிய குறைவுற்ற முத்திரை கட்டணமும் வா.சா.ஆ.3 ற்கு செலுத்தப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 பதிவு செய்யப்படாததாலும், அதற்கு உரிய சரியான முத்திரை தீர்வை செலுத்தப்படாததாலும், வா.சா.ஆ.3 ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

5) மேற்படி சாந்தம்மாளுக்கு எவ்வித சொத்தும் கிடையாது என்றாலும், வா.சா.ஆ.3 உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணமும் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 புல எண்.152 ற்கான புல வரைபடம் பழைய புல வரைபடமா அல்லது புதிய புல வரைபடமா என்றால் தற்போதைய புல வரைபடம். அப்படியானால் பழைய புல வரைபடம் என்று ஒன்று கிடையாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6) வா.சா.ஆ.7 ன் படி வழக்கு சொத்துக்களான புல எண்கள்.152/8, 152/11 ஆகியவற்றின் அளவுகள் சரியாக உள்ளதா என்றால் சரியாக உள்ளதா, இல்லையா என்று எனக்கு தெரியாது. புல எண்.152/11 ஐ பொறுத்து எனது மனைவி பெயரில் 17.05.2005 ல் பெற்ற கிரையம் ஆவணம் தான் வா.சா.ஆ.12 என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு

எந்த திசையில் எனது மனைவி பெயரில் கிரையம் பெற்ற மேற்படி சொத்து உள்ளது என்றால் கிழக்கு பகுதியில் உள்ளது. எனது மனைவியின் சொத்திற்கு கிழக்கு பகுதியில் தான் மேலத்தெரு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ல் சொத்து விவரத்தில் கிழமேல் 65–1/2 ஜாதியடி, தென்வடல் 29 அடி என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

7) எனது சொத்து மற்றும் எனது மனைவி சொத்து ஆகியவற்றின் ஆவணத்தில் மேற்படி சொத்துக்களுக்கு வடக்கே பாதை இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பாதையை ஒட்டிய பாதைக்கும் வடக்கே எனக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.152/10. புல எண்.152/10 ற்கு மேல்புறம் யாருடைய சொத்து உள்ளது என்றால் நிக்கோலஸ் சுந்தரம் என்பவரது சொத்து உள்ளது.

8) வழக்கு சொத்துக்களுக்கும், மேற்படி நிக்கோலஸ் சுந்தரத்தின் சொத்திற்கும் இடையே உள்ள பாதையை பொறுத்து இவ்வழக்கு 1ம் பிரதிவாதி மேற்படி நிக்கோலஸ் சுந்தரத்திற்கு எதிராக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.587/2004 ல் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் மேற்படி பாதையை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9) மேற்படி வழக்கில் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 27.03.2017 ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த

அறிக்கையில் மேற்படி பாதையில் நானும், மேற்படி நிக்கோலஸ் சுந்தரமும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளார் என்றால் நான் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை. மேற்படி வழக்கில் தீர்ப்பில் புல எண்.152/20 வண்டி பாதை என்றும், மேற்படி பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சொத்தின் அளவுகள் எனக்கு தெரியாது என்றாலும், மேற்படி வண்டிப்பாதையின் அளவுகள் எனக்கு தெரியாது என்றாலும், சரியல்ல, 2 அளவுகளும் எனக்கு தெரியும்.

10) இவ்வழக்கில் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட கோரி எனது தரப்பில் மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் ஆணையர் தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கில் ஆணையர் தனது அறிக்கையை எனது உரிமை மூல ஆவணத்தின் அடிப்படையிலும், புல வரைபடத்தின் அடிப்படையிலும் தாக்கல் செய்துள்ளார் என்றால் புல வரைடத்தில் உள்ள அளவுகள் சரியாக இல்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், எனது ஆவணத்தின் படி வழக்கு A அட்டவணை சொத்தின் தென்வடல் கீழ் புறம் 33–1/2 அடி என்று கூறியுள்ளார் என்றால் சரிதான்.

11) நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், எனது மனைவியின் ஆவணத்தின் படி மேற்படி சொத்தின் தென்வடல் கீழ் புறம் 33–1/2 அடி இருந்ததாக அளவீடு செய்து அதனையே காட்டியுள்ளார் என்றால் சரிதான். மேலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், புல எண்.152/20 பாதையின் அகலம் 11–1/2 அடி என்று ஆணையர் காட்டியுள்ளார் என்றால்

நியாபகம் இல்லை. புல எண்.152/20ல் உள்ள பாதையின் அகலம் 14 அடியிலிருந்து 11–1/2 அடியாக குறைந்ததால் தான் எனது மனைவியின் கிரைய ஆவணத்தில் தென்வடல் கீழ் புறம் 29 அடி என்று காட்டப்பட்டுள்ளது என்றால் 33–1/2 அடி ஆவணத்தில் இருந்தது, பதிவு செய்யும் போது 29 அடியாக பதிவு அலுவலகத்தில் மாற்றியுள்ளார்கள், ஆனால் நாங்கள் மாற்றவில்லை. தரப்பினர்களான நாங்கள் எழுதி கொடுத்தவாரே பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வார்கள் என்றாலும், பதிவு அலுவலக ஊழியர்கள் அவர்களாக எந்த மாற்றமும் செய்யமாட்டார்கள் என்றாலும் சரியல்ல.

12) வா.சா.ஆ.12ன் படி தென்வடல் கீழ்ப்புற அளவான 29 அடி மட்டுமே எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதை தாண்டியுள்ள இடம் எங்களுக்கு உரியது அல்ல என்றாலும் சரியல்ல, 33–1/2 அடி வரை எங்கள் உடையது. நான் சொல்வது போல் புல எண்.152/20 ஆனது 7 அடி வழிநடைப்பாதையாக இருந்திருந்தால், ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் பூஸ்துதில் பத்திரத்தின் அடிப்படையில் 11–1/2 அடியாகவோ அல்லது புல வரைபடத்தின் அடிப்படையில் 16–1/2 அடியாகவோ இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பூஸ்துதில் புல எண்.152/20 ஆனது புல வரைபடத்தின் அடிப்படையில் 16–1/2 அடி உள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ததன் அடிப்படையில் மேற்படி அ.வ.எண்.584/2004 வழக்கில் தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி தீர்ப்பு பற்றி தெரியாது.

13) புல வரைபடத்தை திருத்தம் செய்ய நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா பாதையை

பொறுத்து முன்னதாக தீர்ப்பு பகரப்பட்டுவிட்டதால் இவ்வழக்கு முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சாந்தம்மாளுக்கு பாகம் பிரிந்ததாக கூறும் வா.சா.ஆ.3 ஆவணமும், அதன் அடிப்படையில் நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.4 கிரைய ஆவணமும் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்பதால் இவ்வழக்கில் நான் பரிகாரம் கோர எனக்கு எவ்வித முகாந்தரமும் இல்லை என்றால் சரியல்ல. புல எண்.152/20 ல் உள்ள வண்டிப்பாதை பல வருடங்களாக மக்கள் பயன்படுத்தி வரும் பாதை என்றாலும், அதில் நான் செய்துள்ள ஆக்கிரமிப்பை மறைக்கவே நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.